தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**


முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **4-7-2015**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் டெல்லி குடியரசு தினவிழா அணிவகுப்புக்கான தேசிய மாணவர் படையின் தேர்ச்சி முகாம்

தேசிய மாணவர் படையின் பயிற்சி முகாம் மற்றும் டெல்லி குடியரசு தின அணிவகுப்புக்கான தேர்ச்சி முகாம் கோவை மாவட்ட நான்காவது பட்டாலியன் சார்பில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ஆகஸ்ட் **1** முதல் **10**ம் தேதி வரை கர்னல் ஆண்டனி ஜோசப் மற்றும் மேஜர். ரூபா தலைமையில் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு ளோண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தன் அனுபவத்தை மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த முகாமில் சுமார் **400** மாணவர்கள் வருடாந்திர சிறப்பு முகாமிலும் **150** மாணவர்கள் குடியரசு தின விழா தேர்வு முகாமிலும் கலந்து கொண்டுள்ளனர். இதில் சுமார் **200** பேர் மாணவிகள். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் வரும் ஜனவரி **2016**ல் டெல்லியில் நடைபெற உள்ள குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்து கொள்வார்கள்.

வேளாண்மைக் கல்லூரி முதன்மையர் ச. மகிமைராஜா அவர்கள் மாணவர்களுக்கான வசதி செய்து கொடுத்து சிறப்பித்துள்ளார். தமிழ்நாடு வோளாண்மைப் பல்கலைக்கழக தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் கு.ம. செல்லமுத்து அவர்கள் முகாமை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்










COLLEGE STADIUM
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
விளையாட்டரங்கம்
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
STADIUM
KOVAI GROUP
4 TAMILNADU BATTALION NCC